செ.கு. எண்: 272 நாள்: 24/12/11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 24.12.2011

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், பாதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பு உடையார் என்பவரின் வீட்டில் 23.12.2011 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் அவரது மனைவி செல்லம்மாள் என்பவர் தீயினால் பாதிக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த திருமதி. செல்லம்மாள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி. செல்லம்மாள் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9